### வாழ்வுகாலப் பயன்கள் - 4 வருடத்திற்கு ஒருமு

4 வருடத்திற்கு ஒருமுறை வாழ்வு கால பயன்கள் இத்திட்டத்தின் சிறப்பாகும். 5 ஆண்டிற்கு ஒரு முறை வரு இத்தொகையினை இன்றே திட்டமிட்டு உபயோகிக்கலாம்.

### இத்திட்டத்தின் இன்றியமையாத சிறப்பம்சம

பாலிசி திட்ட காலத்தில் பாலிசிதாரர் இறக்க நேர்ந்தால், முதிர்வுத் தொகையாக காப்பீட்டுத் தொகை மற்றும் இலாபத்தொகை முழுவதும் அளிக்கப்படுகிறது. இத்தொகையில் வாழ்வு காலப்பயன்கள் ஏதாகிலும் முன்னரே வழங்கப்பட்டிருந்தாலும் அவை கழிக்கப்படமாட்டா.

### அதிகரிக்கும் இறப்புக் காப்பு

5 வருடத்திற்கு ஒருமுறை காப்புத் தொகையில் 50 சதம் உயருகிறது. இது இத்திட்டத்திற்கே உரிய மற்றுமொரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

| காலம் (ஆண்டு) | வழங்கப்படும் மொத்த இறப்புப் பாதுகாப்பு |
|---|---|
| 1 முதல் 5 வரை | ஒரு காப்புத் தொகை |
| 6 முதல் 10 வரை | 1.5 மடங்கு காப்புத் தொகை |
| 11 முதல் 15 வரை | 2 மடங்கு காப்புத் தொகை |
| 16 முதல் 20 வரை | 2.5 மடங்கு காப்புத் தொகை |

### விபத்துப் பாதுகாப்பு மற்றும் திறனிழப்பு பாதுகா

மிகக்குறைந்த தொகையை பிரீமியத்துடன் சேர்த்து கட்டுவதன் மூலம் இச்சலுகையை பாலிசிதாரர் பெறலாம். இதன் மூலம் பாலிசி நடப்பு காலத்தில் பாலிசிதாரர் விபத்தினால் இறக்க நேர்ந்தால் ஒரு கூடுதல் காப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது. இச்சலுகை பெற அதிக பட்ச உச்ச வரம்பு வயது 70 ஆகும். இவ்விபத்துப் பாதுகாப்பு தொகை மற்ற பாலிசிகளில் பெறப்பட்ட விபத்துக் காப்பை பொறுத்து அமையும்.

அவ்வாறு அல்லாமல் விபத்தின் காரணமாக திறனிழப்பு ஏற்படுமாயின் ஒரு காப்பீட்டுத் தொகையை 10 வருடத்திற்கு மாதத்தவணையாக பிரித்து வழங்கப்படுகிறது. அத்துடன் திறனிழப்பு ஏற்பட்ட தேதியிலிருந்து பிரீமிய விலக்கும் வழங்கப்படுகிறது. விபத்துக் காப்பு பெறுகிறவர்களுக்கு மட்டுமே இது

### பணத்திற்கு முழு பாதுகாப

நாம் முதலீடு செய்கின்ற பணம் பாதுகாப்பாக இருக்க வேண்டுமாயின் அது பாதுகாப்பானோர் கைகளில் இருக்க வேண்டியது அவசியமாகிறது. அந்த வகையில் எல்.ஐ.சி.யில் முதலீடு செய்கின்ற தொகை நேர்மையான நிர்வாகம் தெளிவான முதலீட்டுக் கொள்கை என பல்வேறு சிறப்புகளைக் கொண்ட நிர்வாகத்தின் வசம் இருக்கிறது.

### இலாபத் தொகை

பிரீமித் தொகையினை முதலீடு செய்வதன் மூலம் கிட்டும் இலாபத்தை எல்.ஐ.சி நிறுவனம் பாலிசிதாரர்களுக்கு வருடா வருடம் கணக்கிட்டு பகிர்ந்தளிக்கிறது. இந்த இலாபத்தொகை முதிர்வின் போதோ அல்லது அதற்கு முந்தைய இறப்பின் போதோ வழங்கப்படுகிறது.

இந்த அறிக்கை, இத்திட்டத்தின் பயன்களை தாங்களுக்கு முழுமையாக எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற நோக்கம் கொண்டது.
அதிக படியான அல்லது சட்டரீதியான விளக்கங்கள் பெற பாலிசி பத்திரம் ஒன்றையே ஆதாரமாகக் கொள்ள வேண்டும்.

**வருமான வரி சலுகைகள**

**Section 80(C) of IT Act.**

மேற்கூறிய வருமானவரி விதியின் படி காப்பீட்டுக்காக கட்டப்படும் பிரீமியத் தொகைக்கு வருமான வரி விலக்களிக்கப்படுகிறது. நிகர வருவாயில் இப் பாலிசிக்கான பிரீமியத் தொகை நேரடியாக குறைக்கப் படுகிறது. இச்சலுகைக் கான அதிக பட்சமாக உச்ச வரம்பு 1,00,000 ஆகும்.

இந்த சலுகை பாலிசிதாரரின் பெயரிலுள்ள பாலிசிகளுக்கு மட்டுமல்லாமல், மனைவி மற்றும் பிள்ளைகளின் பாலிசிகளுக்கும் பொருந்தும். (மணமான மகள்களின் பெயரில் உள்ள பாலிசிகளும் இதில் சேரும்).

**Section 10(10D) of IT Act.**

வாழ்வுகாலப்பயன்கள், முதிர்வுத்தொகை அல்லது இடையில் இறப்பு நேர்ந்தால் வழங்கப்படும் தொகை இவை இரண்டிற்குமே வருமான வரி விலக்கு அளிக்கப்படுகிறது. அந்த தொகைக்கு வருமானவரி செலுத்த தேவையில்லை. இது காப்புத் திட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்பு சலுகையாகும்.

**ஒப்புவித்தல்**

மூன்று வருடங்களுக்கு மேல் பிரீமியம் செலுத்திய பின்னர் திட்டத்திலிருந்து விலகிக் கொள்ளலாம் ஆனால் அப்படி விலகும் போது அதுவரை காப்பளித்ததற்கான தொகை குறைக்கப்படும்.